# சிதம்பரம் நகராட்சி



## 2023 ம் ஆண்டு தை திங்கள் -19ம் நாள் 02.02.2023 வியாழக்கிழமை மாலை 04.00 மணியளவில் நடைபெறும் அவசர நகர்மன்ற கூட்டம்

### மன்றக்கூட்டப் பொருள்

**1)** சிதம்பரம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை சேகரிக்கும் பணிகளை Service Provider / Agency / Contractor மூலம் மூன்று ஆண்டுகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறை ஆணை ந.க.எண்.33553/22/EA2 SWM-13 நாள். 10.01.2023-இல் கீழ்காணும் விபரப்படி வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| Name of the Municipality | Quantity of Waste Generated (TPD) | Rate for (Tonner in Rs.) | Estimated Base Cost per Day (Rs.in lakh) | Estimated Base Cost per year (Rs.in lakh) | Applicable GST 10% and LWF 1% (Rs.in Lakh) | Estimated Base Cost per year (Rs.in lakh) |
|---|---|---|---|---|---|---|
| Chidambaram | 23.18 | 4,540.96 | 1.05 | 383.25 | 72.81 | 456.06 |

மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகராட்சி நிதிப்பற்றாக்குறை ஏற்படின் 15வது மத்திய நிதிக்குழு மானியத்தின் (15th CFC SWM Tied Grant)- யை பயன்படுத்திக்கொள்ளவும். மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெற்று ஓர் ஆண்டிற்கு பணி உத்தரவு வழங்கி அந்நிறுவனத்தின் செயல்திறன் (Performace Satisfaction) திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் அடுத்த இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளுக்கு மன்ற அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி காலத்தை நீடித்து வழங்கவும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான நாளிதழ் விளம்பர செலவினத்தை நகராட்சியின் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மன்ற அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

. **ந.க.எண்.882/2022/எச்1**

தீர்மானம் எண் 273 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**2)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 13, அனந்தீஸ்வரன் கோவில் தெருவில் உள்ள சிறுவர் பூங்காவினை பராமரிப்பு பணி செய்திட நகர்மன்ற உறுப்பினரின் கோரிக்கையினை ஏற்று, நகர்மன்ற தலைவர் அவர்களின் ஆலோசனையின்படி தயாரிக்கப்பட் மதிப்பீடு ரூ.3,80,000/- க்கு பணியினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 274 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3) சிதம்பரம் நகராட்சியில் தூய்மை பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு அளித்திடும் வகையில் பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் செய்யவும், தூய்மை பணிக்கு தேவைப்படும் பொருட்கள் மற்றும் கிருமி நாசினிகள் வாங்குவதற்கும் 05.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விவரம் | ஒப்பந்ததாரர்களின் பெயர் முகவரி | மதிப்பீட்டை விட குறைவு % | மதிப்பீட்டை விட அதிகம் % |
|---|---|---|---|---|
| 1 | சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தூய்மை பணிகள் மேற்கொள்ள தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் விநியோகம் செய்யும் பணி | மெஸ்ஸர்ஸ். எவர்கிரீன் ஃபேர் டிரேடு பிரைவேட் லிட்., 18/26, 2–வது தெரு, லோகநாதன் நகர், சூளைமேடு, சென்னை – 600 094. | 0 % (மதிப்பீட்டு விலை விகிதத்தில்) | |
| 2 | | மெஸ்ஸர்ஸ். கே.எம். பாலிபேக்ஸ் 1/142/5 வெற்றிலை ஊரணி, விஸ்வநாதம், சிவகாசி – 626 189. | | 8.45 % |

**அலுவலகக் குறிப்பு :** 1) மேற்படி ஒப்பந்தப்புள்ளிக்குரிய மதிப்பீட்டு தொகை ரூ.8.38.000 இலட்சத்திற்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி நாள் 22.12.2022.

2) மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1–ன் ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ். எவர்கிரீன் ஃபேர் டிரேடு பிரைவேட் லிட்., 18/26, 2–வது தெரு, லோகநாதன் நகர், சூளைமேடு, சென்னை – 600094 என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், நகராட்சி பொது சுகாதாரத்தை பேணி காத்திடவும் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3616/2022/எச்.1)

தீர்மானம் எண் 275 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4) சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் 12 நகராட்சி பள்ளிகளின் கழிப்பறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு ஓப்பந்ததாரர். திருமதி. R. கோமதி அவர்களை நியமனம் செய்து பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி ஒப்பந்த பணிக்காலம் 31.01.2023 ல் முடிவடைந்துள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.33553/2022/EA2 SWM/13 நாள்.10.01.2023 தூய்மை பணியாளர்களின் பணி நியமனம் தனியார் வசம் ஒப்படைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தூய்மை பணி இன்றியமையாத பணியாக இருப்பதால், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அதே ஒப்பந்ததாரருக்கு அதே ஒப்பந்த விலை விகிதத்திலேயே மேற்கண்ட பள்ளிகள் சுத்தம் செய்யும் பணியினை 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்து பணியின் அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

. அலுவலகக்குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4683/2020/எச்1

தீர்மானம் எண் 276 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**5)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய **19.01.2023** அன்று **வருவாய் நிதி (Revenue Fund) 2022–23 ன்**கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்த சதவீதம் குறைவு** | **ஒப்பந்த சதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **வருவாய் நிதி (Revenue Fund) 2022–23** | | | | |
| **1** | சிதம்பரம் நகராட்சி வார்டு எண். **4**, காதர்கான் தைக்கால் தெருவில் **67** மீட்டர் நீளத்திற்கு புதிதாக கழிவுநீர் சேகரிப்பு குழாய் அமைக்கும் பணி. | **திருமதி.ஆர்.கோமதி,** ஒப்பந்ததாரர், சம்பந்தகார தெரு, சிதம்பரம். | 1,12,000/– | மதிப்பீட்டு விலையை விட **0.18** % குறைவு | |
| | | **திருமதி.கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | | –– | மதிப்பீட்டு விலையை விட **0.31** % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.**5**–ல் கண்டுள்ளபடி **0.18** % மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திருமதி.ஆர்.கோமதி,** ஒப்பந்ததாரர், சம்பந்தகார தெரு, சிதம்பரம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 277 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**6)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். **23**–ல் உள்ள மாலைக்கட்டித்தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடத்திற்கு பேவர்பிளாக் தரைதளம், Flooring & Wall Tiles, Inner plastering work கழிப்பிடம் பழுது மற்றும் பராமரிப்பு சுவர்களுக்கு வர்ணம் பூசுதல், கதவு ஜன்னல்கள் பழுது பார்த்தல், குடிநீர் மற்றும் கழிவுநீர் பைப்லைன் மாற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இப்பகுதியில் நகர்மன்ற

உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் ஆலோசனையின்படி இப்பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**15.00** இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 278 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**7)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். **18**–ல் மேலவீதி OHT அமைந்துள்ள வளாகத்தில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கட்டிடம் சுமார் **45** வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட கட்டிடத்தின் உறுதி தன்மை குறைந்து, விரிசல் ஏற்பட்டு மிகவும் பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ளது. இக்கடையினை ஏலம் எடுத்த குத்தகைதார்களின் உயிருக்கும், பொருள்களுக்கும் பாதுகாப்பு கருதி உடனடியாக இக்கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 279 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**8)** சிதம்பரம் நகராட்சி **தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2022–23ன்**கீழ் மதிப்பீடு ரூ. **26.00** இலட்சத்திற்கு சி.தண்டேஸ்வரநல்லூர் உரக்கிடங்கில் Resource Recovery Center அமைக்கும் பணிக்கு **25.01.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 280 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

இடம் : சிதம்பரம்
நாள் : 02.02.2023

**(ஒம்)திரு.கே.ஆர்.செந்தில்குமார்,**
**நகர்மன்றத்தலைவர்,**
**சிதம்பரம்**

/உண்மைநகல் உத்தரவுப்படி/

**ஆணையர்,**
**சிதம்பரம் நகராட்சி**